2019 ஜூலை 19]

இடங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதிலே அறநிலையத் துறையினுடைய NOC கேட்கிறார்கள். அதைக் கொடுக்க மறுக்கிறார்கள். எனவே, மின்சார வசதி இல்லாமல் இருக்கிற அந்தக் கோயில் நிலத்திலே குடியிருக்கிறவர்களுக்கு மின் வசதி அளிக்க வேண்டும். அதற்கு அறநிலையத் துறை NOC தர வேண்டும். இல்லையென்றால், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் NOC பெறாமலேயே மின் இணைப்பு கொடுப்பதற்கு முன்வர வேண்டும், ஒன்று.

இரண்டாவது, பழுதுபட்ட தன்னுடைய கொட்டகை வீடுகளை, அவரவருடைய பொருளாதார வசதிக்கேற்ப மாற்று கொட்டகை கட்டிக்கொள்ள முன்வருபவர்களை அறநிலையத் துறையினர் தடுக்கிறார்கள். அதைத் தடுக்காமல் இருக்க வேண்டும். ஆக, கோயில் நிலத்தில் குடியிருக்கிறவர்கள் எந்த இடத்தில் குடியிருக்கிறார்களோ, அங்கேயே அவர்களுக்கு NOC கொடுத்தாலே போதும் என்பதுதான் அங்கே குடியிருப்பவர்களுடைய வேண்டுகோளாக இருக்கிறது என்பதை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். நியாயமாக அமைச்சரவைக் கூட்டத்திலே இதுபற்றி விவாதித்து, இதற்கு ஒரு முடிவை கொண்டுவர வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**150—**

## பேருந்து வசதி

***3462—திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி, திமிரி ஊராட்சி ஒன்றியம், ஆற்காடு நகரத்திலிருந்து வளையாத்தூர் ஊராட்சி வரை திமிரி வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆற்காடு பேருந்து நிலையத்திலிருந்து வளையாத்தூர் ஊராட்சி வரை திமிரி வழியாக தற்போது இயக்கப்படும் பேருந்து வசதியே போதுமானதாக உள்ளதால், இவ்வழித்தடத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்க அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

**திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், இளைஞர் அணிச் செயலாளர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு தொகுதி, தடம் எண் 30-குக்குண்டி வழியாக, தடம் எண் 36-அனத்தாங்கல் மாலை வழித்தடம், தடம் எண் 30, 45-எசையனூர் மற்றும் மல்லிகாபுரம், தடம் எண் T30-மாந்தாங்கல் மாலை வழித்தடம், தடம் எண் 41-மேல்நேத்தயபாக்கம், தடம் எண் 26-வெள்ளம்பி, தடம் எண் 9-குட்டியம், தடம் எண் T45-நல்லூர் வழித்தடம், தடம் எண் 137-பாலி வழியாக, தடம் எண் 15N நஞ்சுகொண்டாபுரம், தடம் எண் 7J, 7H-ஆயிரமங்கலம், பெருமாந்தாங்கல், தடம் எண் 35, 40-மழையூர் வழியாக, தடம் எண் 35-செய்யாத்துவண்ணம் வழியாக, தடம் எண் 202 பரதராமி பஸ் ஸ்டாப் வேண்டும், தடம் எண் 37-தூர்கம், தடம் எண் 7H-பழையனூர், தடம் எண் 31-பழையனூார் ADC மற்றும் பாப்பேரி, மேலதாங்கல், கீராம்பாடி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், இருங்கள். நீங்கள் பேசுவது சரி, பதிவு செய்ய வேண்டுமல்லவா? அதற்குத் தகுந்தவாறு பேசுங்கள்.

**திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கைகளை எல்லாம் சொல்ல வேண்டுமென்றால், வருடத்திற்கு ஒரு கேள்விதான் தருகிறீர்கள், ஒவ்வொரு route-க்கும் ஒரு வருடம் செய்தால், 20 வருடங்கள் நான் எம்.எல்.ஏ-வாக இருக்க வேண்டும்.

*2019 ஜுலை 19]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன். இல்லை, எனக்கு வாய்ப்பு இருக்கிற மாதிரிதான் நான் தர முடியும்.*

**திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கைகளெல்லாம் எங்களுடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், ஊராட்சி சபைக் கூட்டங்களை எங்களுடைய கிராமங்களில் நடத்தச் சொன்னபோது, பொதுமக்கள் எங்களிடம் வைத்தவை. இந்தக் கோரிக்கைகளைப் பார்த்தீர்களென்றால், இந்த* route-*ல் ஒன்றரை கிலோ மீட்டர் அல்லது இரண்டு கிலோ மீட்டர்தான் உள்ளே சென்றுவரும் சூழ்நிலை இருக்கும். ஏனென்றால், இரண்டு கிலோ மீட்டர், மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு, குழந்தைகள், +2 படிக்கும் மாணவர்கள் நடந்துபோய் பள்ளிக்கூடம் செல்லும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்த மாதிரி வழித்தடங்களை ஆய்வு செய்து, இந்த குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்வதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்* express *வேகத்தைவிட வேகமாகப் போகிறார். அவர்* jet *வேகத்தில் போகிறார். அவர் என்ன சொன்னார் என்று எனக்குத் தெரியவில்லை. பேருந்துகளின் தடம் நீட்டிப்பு குறித்த அவருடைய கோரிக்கைகளை எழுத்துபூர்வமாகக் கொடுத்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக செய்து கொடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.*

**திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கைகளைத் தங்களிடம்*

கொடுத்துவிடுகிறேன். அவற்றை தாங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுத்துவிடுங்கள். மேலும், தடம் எண் 555, ஆற்காடு முதல் திருச்சி வரை இயக்கப்பட்ட பேருந்து கடந்த ஒரு மாதமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பேருந்து மீண்டும் இயக்கப்படுமா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் முதலில் கேட்கப்பட்ட கேள்விக்கு 'அந்தப் பேருந்து வளையாத்தூர் செல்வதற்கு வாய்ப்பில்லை' என்ற பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கேள்வியை நான் ஏன் கேட்டேன் என்றால், அந்தப் பேருந்து, திமிரி, B.D.O. அலுவலகம், குண்டலூர், பயலூர், கீழ்ப்பாடி, கனியம்பாடி, வளையாத்தூர் வழியாகச் சென்றால், கிட்டத்தட்ட 4 ஊராட்சிகள் அந்த வழியில் cover ஆகிவிடும். என்னுடைய இந்தக் கோரிக்கையையும் நிறைவேற்ற அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு clarification-ஐச் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 'இதனை அமைச்சரவையிலே விவாதித்திருக்கலாம்' என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். குறிப்பாக, கோயில் நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு வழிவகை இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்து வைத்து, அதன்மீது மேற்கொள்ளப்பட்ட விவாதங்களின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணவேண்டுமென்கிற அடிப்படையில், ஒன்று, அதற்கான நில மதிப்போ அல்லது நிலப் பரிவர்த்தனை மூலமாகவோ அதைக் கொடுக்கலாம் என்ற ஒரு தீர்வு கொடுத்துள்ளார்கள். அந்தப் பதிலின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப் பற்றி கேட்டார்கள். அதனைப் பதிவு செய்திருக்கிறோம். அந்த clarification உடன் கூடுதல் தகவலாக மின் இணைப்பும் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்ற அந்தக் கோரிக்கையையும்

*2019 ஜூலை 19]*

*மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆகவே, இதுகுறித்து ஏற்கெனவே அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதம் செய்யப்பட்டு, அதற்குத் தீர்வையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு இந்த அவையின்மூலம் நான் பதிவு செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். நாகராஜன் அவர்கள்.*

**திரு. எஸ். நாகராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* 'The most powerful woman in India' *என்று ஆங்கில நாளேடுகளால் பாராட்டப்பட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். விவசாயிகளுடைய பாதுகாவலர், குடிமராமத்து திட்டம் தந்த நாயகன் மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்களையும் வணங்குகிறேன். தென்னாட்டு தங்கம் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஐயா அவர்களையும் வணங்குகிறேன்.*

*மானாமதுரை தொகுதிக்குட்பட்ட மானாமதுரை ஒன்றியத்தில் கிருஷ்ணராஜபுரத்தையும், கன்னார்தெருவையும் இணைக்கும் வகையில் ஒரு தரைப்பாலம் அமைத்துத் தர வேண்டுமென்பது அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்தது. எங்களுடைய கோரிக்கையை கனிவோடு பரிசீலனை செய்து பேரவை விதி 110-ன்கீழ் அதற்காக ரூ.9 கோடி நிதியை அள்ளித் தந்து, அந்த அறிவிப்பை செய்த மாண்புமிகு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதி, மானாமதுரை சிப்காட்டில் பணிமனை அமைக்கப்பட்டது. அப்பணிமனையைப் புனரமைப்பு செய்து, நவீனப்படுத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

கேட்டிருக்கின்ற கேள்வி, மூல வினாவிற்கு சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருந்தாலும், பணிமனை சம்பந்தமாகக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக துறை அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அந்தப் பணிமனையை நவீனப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 2. தகவல் கோரல்

### (அ) தேசிய மருத்துவ ஆணைய சட்ட மசோதா மற்றும் தேசிய EXIT தேர்வுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளதற்கு எதிர்ப்பு தெரிவித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

*முற்பகல் 11-15*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் மத்திய அமைச்சரவையிலே* National Exit Test *குறித்து ஓர் ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. அது குறித்து இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, சில விளக்கங்களை நான் பெற விரும்புகிறேன். தேசிய மருத்துவ ஆணையம் தொடர்பான புதிய மசோதா, மாநில உரிமைகளைப் பறிக்கக்கூடிய வகையிலே நேற்றைய முன்தினம் மத்திய அரசால் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய மருத்துவக் கழகத்தின் உறுப்பினர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில், தமிழகம் போன்ற அதிக மருத்துவக் கல்லூரிகள் இருக்கக்கூடிய மாநிலத்திற்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. தேசிய மருத்துவக் கழகத்திற்கு உறுப்பினர்கள் மற்றும் தலைவரைத் தெரிவு செய்யக்கூடிய* Search